# ???????? ???????????? ??????????? ??????? ?????????????????? ????? ????????





நிபந்தனைகயின் அடிப்படையில் பிரித்தானியாவின் கன்சர்வேர்ட்டி கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தில் செயலாற்றிவரும் தமிழ் இளையோர் செயற்பாட்டாளர்கள் குழு அக்கட்சியின் மற்றுமொரு பாராளுமன்ற

உறுப்பினரான Hon. Loue Franch MP அவர்களின் பிரச்சார பணியில் கலந்து கொண்டு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்திருந்தனர்.

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள பிரித்தானியாவின் பொதுத்தேர்தல் இவ்வாண்டின் இரண்டாம் அரையாண்டில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் ஆளும் கட்சியான கன்சர்வேர்ட்டிவ் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் பெரும் முனைப்புடன் தேர்தலை எதிர்கொள்ள தமது பிரச்சார பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தத் தேர்தலில் புலம் பெயர் தமிழர்களும் வாக்குகளின் எண்ணிக்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகளாக உள்ளனர் என்பது மறுப்பதுக்கில்லை.

இந்நிலையிலேயே இந்த சர்ந்தப்பத்தினைப்பயன்படுத்தி தமிழினப்படுகொலைக்கு நீதியும் தமிழீழ கொள்கைக்கு ஆதரவும் வழங்கவேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் தமிழ் செயற்பாட்டாளர்கள் பலர் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் பிரச்சாரங்களில் கைகோர்த்துள்ளனர்.

சிறிலங்காவில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை பிரித்தானியா ஏற்றுக்கொண்டு நீதி வழங்குவதோடு இராணுவத்தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தக்குற்றவாளிகளுக்கு எதிராக பிரித்தானியா தடை விதிக்க வேண்டும் என்றும் தமிழர்களின் தனிநாட்டு தமிழீழ கோரிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியுடன் இணைந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தவகையில் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர்களில் பிரச்சார பணிகளில் தங்களை இணைத்துக்கொண்டு செயலாற்றி வரும் தமிழ் செயற்பாட்டாளர்கள் Old BexLey and sidcup பகுதியில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் Hon. Loue Franch MP அவர்களுக்கான ஆதரவு வேண்டி பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இன்பராஜ் பத்திநாதர்க, ஜன் தேவராசா ஆகியோர் தலைமையில் செயற்பாட்டாளர்களான மரியநாயகம் வேதநாயகம், ரமணன் சிவலிங்கம்ஈ, ஸ்வரன் டறோஜன், ஏஞ்சலோ நிருசன், பத்மநாதன் துலக்ஷன், றூபன் மத்தியாஸ், ஜெயவீரசிங்கம் பேரானந்தம், சிவசிதம்பரம் கோகுலன், துரைராஜா நீதிராஜா, பரணீதரன் பர்மிலன், பிரியதர்ஷன் கனகலிங்கம் ஆகியோரே இப் பிரச்சாரப்பணியில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.


ELSA ROAD




CHARGE
NOTICE
WARNING


Mon - Sat
8 am - 6.30 pm
BEXLEY COUNCIL
RACKHAM
CLOSE
CLEAN IT UP


LOUIE FRENCH MP FOR
OLD BEXLEY AND SIDCUP
WITH BRITISH TAMIL
CONSERVATIVES (BTC)
MEETING POINT :WELLING TRAIN STATION CAR
PARK STEPHENSON CLOSE,WELLING,DA16 3AU
MEETING AT 2.00pm
CORDINATOR
Inparaj pathinathar
07727254487
CORDINATOR
Kajan thevarasa
07436334550
Piriyatharsan
amakalingam
Paraneetharan
Parmilan
Perananthan
Jeyaveerasingam
Neethirajah
Thurairajah
Mariyanayakam
Vethanayakam
Thulakshan
Pathmanathan
Rupan
mathiyas
Angelo nirushan
kathiramar
Eswaran
Daroshan
Ramanan
Sivalingam
Kokulan
Sivasithambaram
CAMPAIGNING FOR CONSERVATIVES
IN A BID TO GET THEIR SUPPORT TO SEEK JUSTICE
FOR THE GENOCIDE OF TAMILS IN SRI LANKA AND ESTABLISH TAMIL EELAM

# ???? ????????? ???????? ??????
# ???????????? ???????? ????????????
# ??????? ????????????!



”உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பின்னணியை ஆராய்வதற்கு சர்வதேச நீதிபதிகளின் பங்குபற்றலுடன் வெளிப்படையான விசாரணை அவசியம்”என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது” ஜனாதிபதித் தேர்தலில் உறுதியாக நான் போட்டியிடுவேன். உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க எதிர்கால ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

விசாரணைகளை நடத்துவதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படும். இந்தக் குழுவில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் புலனாய்வாளர்கள் உள்ளடக்கப்படுவார்கள். எமது அரசாங்கத்தின் கீழ், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்படும்.

விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தப்படும். அதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்கு விசேட நீதிமன்றமொன்று நிறுவப்படும்.
இந்த கொடூரமான செயலில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக சுயாதீனமான அரச சட்டத்தரணிகள் கொண்ட அலுவலகமும் நிறுவப்படும்.

தற்போதைய அரசாங்கம் குண்டுவெடிப்பு பற்றிய உண்மைகளை மறைத்துள்ளது. நாம் அதனை எமது அரசாங்கத்தில் வெளிக்கொண்டு வருவோம்” இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.